அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2013

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணி 30 நிமிடம்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (5 புள்ளிகள்)

1. மொழிப்பழக்கம் = ________________ + ________________
2. பொற்குடம் = ________________ + ________________
3. பணமின்றி = ________________ + ________________
4. வாய்ப்பேச்சு = ________________ + ________________
5. பூமியெங்கும் = ________________ + ________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (5 புள்ளிகள்)

(1) மரம் + கிளை = ________________________

(2) சோறு + பானை = ________________________

(3) மூன்று + உலகம் = ________________________

(4) தமிழ் + இசை = ________________________

(5) தொண்டு + ஊழியர்கள் = ________________________

| புள்ளிகள் | |
|---|---|

## (இ) பொருத்தமான ஒலியுள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

(10 புள்ளிகள்)

1. அணை உடைந்ததால் ______________________ நகருக்குள் புகுந்து பல வீடுகளை அழித்தது.
   1) வெல்லம் 2) வெள்ளம்

2. இருளில் ____________________ நடந்து செல்வதைத் தவிர்க்க வேண்டும்.
   1) தணியாக 2) தனியாக

3. அப்பா தோட்டத்தில் ________________________ எடுத்தார்.
   1) கலை 2) களை

4. மாடிப்படியிலிருந்து ________________________ பொழுது மாலா கால் தவறிக் கீழே விழுந்தாள்.
   1) இறங்கிய 2) இரங்கிய

5. திருடர்கள் சன்னலின் கம்பியை _________________ வீட்டினுள் நுழைந்தனர்.
   1) வளைத்து 2) வலைத்து

6. தலைவர் இடது _________________________ சட்டை அணிந்து இருக்கிறார்.
   1) தோலிலி 2) தோளில்

7. உடல் ___________________ பெற உடற்பயிற்சி உதவுகிறது.
   1) பழம் 2) பலம்

8. நான் ஒரு கணனி வல்லுனராகத் தொழில் புரிய _________________ .
   1) விளைகிறேன் 2) விழைகிறேன்

9. அந்தக் காகித _____________________ என்ன இருக்கிறது?
   1) உரையில் 2) உறையில்

10. சூரிய __________________ உயிர்களுக்குத் தேவை.
    1) ஒலி 2) ஒளி

| புள்ளிகள் | |
|---|---|

## (ஈ) பொருத்தமான சொல்லை எழுதி வாக்கியங்களை நிறைவு செய்க.

(10 புள்ளிகள்)

1. குருவி அதனது ______________________________ மகிழ்ச்சியாக வாழ்ந்தது.

2. அம்மா தினமும் தவறாமல் செடிகளுக்குத் தண்ணீர் ____________________________.

3. பண்டிகைகளின் போது புதிய ______________________ அணிவது மரபு.

4. நான் நீண்ட தூரம் மெதுவோட்டம் ஓடியதால் ______________________ அடைந்தேன்.

5. புழவகைகளைப் பலரும் ______________________ உண்கிறார்கள்.

6. வள்ளல் தன்னிடமிருந்த __________________________ எல்லாவற்றையும் ஏழைகளுக்கு வாரிக் கொடுத்தான்.

7. அஞ்சல்தலை சேகரிப்பதைப் பலர் __________________________ கொண்டுள்ளனர்.

8. "அன்னையும் பிதாவும் முன்னறி __________________________" என்று ஔவையார் கூறியுள்ளார்.

9. பல வாக்குவாதங்களிற்குப் பிறகு நாங்கள் ஒரு ______________________________ வந்தோம்.

10. மழைக்காலத்தின் போது காணப்படுகின்ற __________________________ ஏழு நிறங்கள் உள்ளன.

| புள்ளிகள் | |
|---|---|

**(உ) கீழ்க்காணும் பகுதியில் 1 முதல் 10 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (20 புள்ளிகள்)

வேலூர் என்பது ஒரு சிறிய கிராமம். அந்தக் கிராமத்தில் கந்தன் என்ற இளைஞன் ஒருவன் (1) ____________________ வந்தான். ஒரு நாள் அவன் அந்த ஊரின் எல்லையில் தன் புல்லாங்குழலை வாசித்துக் கொண்டிருந்தான். அந்த இசை (2) ____________________ இனிமையாகப் பரவியது. அப்போது அங்கு சாமியார் (3) __________________ வந்தார். அவர் வேலூருக்குப் போவதற்கு வழி கேட்டார். தன் இசைக்கு (4) ________________________ செய்த சாமியாரிடம் கந்தன் கோபம் கொண்டான். (5) __________________ அவன் அந்த ஊருக்குப் போகும் வழியைச் சாமியாருக்குக் கூறினான்.

சாமியார் இளைஞனுக்கு (6) _____________ கூறிவிட்டுப் புறப்பட்டார். அப்போது அவர், “தம்பி, மாலையில் மலை மேலுள்ள கோவிலுக்கு (7) _____________ நான் சொர்க்கத்திற்குப் போகும் வழிபற்றி உரை (8) ______________________ போகிறேன்,” என்று இளைஞனிடம் கூறினார். கந்தன் அதைக் கேட்டுச் சிரித்தான். “நீ எதற்காகச் சிரிக்கிறாய்?” என்று சாமியார் கோபமாக (9) ____________________. அவன், “துறவியே, தங்களுக்கோ வேலூருக்குப் போகவே (10) _______________________ தெரியவில்லை. நீங்கள் எப்படிச் சொர்க்கத்திற்குப் போகும் வழியைக் காட்டுவீர்கள்?” என்று சொல்லிச் சிரித்தான். சாமியார் வெட்கத்துடன் நகர்ந்தார்.

| | | | |
|---|---|---|---|
| (1) காதில் | (2) போ | (3) எங்கும் | (4) எனினும் |
| (5) நன்றி | (6) எனவே | (7) நிகழ்த்த | (8) வினவினார் |
| (9) வா | (10) வசித்து | (11) வழி | (12) ஒருவர் |
| (13) சொன்னார் | (14) இடையூறு | (15) வணக்கம் | |

| புள்ளிகள் | |
|---|---|

# பகுதி II

**(ஊ)** **நாட்டைக் காத்த பாலன்**

பள்ளி சென்று படித்து விட்டுப்
பாலன் வீடு மீண்டான்.
வெள்ளம் மதிலை உடைத்து வெளியே
வீழ்ந்து பாய்தல் கண்டான்.

மதிலை நாடிச்சென்ற பாலன்
மதிலில் ஓட்டை கண்டான்.
பதைத்துப் பதைத்துத் தனது கையால்
பாயும் நீரைத் தடுத்தான்.

பாயும் நீரைத் தொடர விட்டால்
ஓட்டை பெரிதாய் ஆகி
பாயும் நீரின் அளவு வேகம்
பல மடங்காய் ஆகும்.

நாடு முழுதும் நீரில் ஆழ்ந்து
நாடே அழிந்து போகும்.
கேடு நேர விடாது காத்தல்
கடமை என்று நின்றான்.

**மேலுள்ள கவிதையைப் படித்து கீழேயுள்ள வினாக்களிற்கு விடை எழுதுக.**

(20 புள்ளிகள்)

1. பாலன் எங்கிருந்து வீடு திரும்பினான்?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

2. பாலன் எதனைக் கண்டான்?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

3. பாயும் நீரின் அளவுவேகம் எப்படிப் பல மடங்காய் ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

4. பாலன் தனது கடமை என்று எதனைக் கருதினான்?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------


5. இக்கதை உமக்குத் தரும் செய்தி என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

| | |
|---|---|
| புள்ளிகள் | |

**(எ) படங்களைக் கவனமாகப் பார்க்கவும். கருத்தை விளங்கிக் கொள்ளவும். 10 வாக்கியங்கள் எழுதவும். கீழே கொடுக்கப்பட்ட உதவிச் சொற்களைப் பயன்படுத்தலாம்.** (30 புள்ளிகள்)




<u>உதவிச் சொற்கள்</u>

| | | |
|---|---|---|
| நீண்டநேரம் | தொலைக்காட்சி | தாமதமாக |
| நித்திரை | மறுநாள்காலை | பள்ளிக்கு |
| நேரமாகிவிட்டது | புத்தகப்பை | ஆசிரியர் |
| பாடம் | நடத்திக் கொண்டிருந்தார் | |

1. ________________________________________

________________________________________

2. ________________________________________

________________________________________

3. ______________________________________________________________

______________________________________________________________

4. ______________________________________________________________

______________________________________________________________

5. ______________________________________________________________

______________________________________________________________

6. ______________________________________________________________

______________________________________________________________

7. ______________________________________________________________

______________________________________________________________

8. ______________________________________________________________

______________________________________________________________

9. ______________________________________________________________

______________________________________________________________

10. ______________________________________________________________

______________________________________________________________

| புள்ளிகள் | |
| --- | --- |